கால கடன்பாடுகள் அதிக சாதகமான நியதிகளில் பெறப்பட்டமையும் ஓரளவுக்குக் காரணமாகும். எடுத்துக்காட்டாக 1979 இல் மொத்தப் பெறுமதியில் 74 சத வீதமான நீண்டகால கடன்களின் 70சத வீதமானவைகள் 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலான சலுகைக் காலத்தைக் கொண்டிருந்தன. வெளிநாட்டுப் படுகடனின் வெளிநின்ற மட்டம் 1978ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 175,060 இலட்சத்தில் இருந்து (சி எ. உ 8650 இலட்சம்) 1979 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 184,470 இலட்சமாக (சி எ. உ. 90,60 இலட்சம்) உயர்வடைந்தது. இதற்குச் செயற்றிட்ட பண்டக்கடன்களின் அதிகரித்த பயன்பாடுகள், வி. நி. வ. பொறுப்பாண்மை நிதியம், என்பவற்றின்கீழ் ப. நா. நி. லிருந்துதான எடுப்பனவுகள் என்பவை காரணமாக அமைந்தன.

இலங்கையின் ரூபா 1977 நவம்பர் 16 தொடக்கம் மிதக்கவிடப்பட்ட செலாவணி விகிதங்களின் கூட்டுமாற்றங்கள் 1979 ஆம் ஆண்டு இறுதியில் ஐ. அ. டொலருக்கு எதிராக 4 சத வீத அதிகரிப்பையும், யப்பானிய யென்னுக் கெதிராக 1 சத வீத அதிகரிப்பொன்றைக் காட்டியது. மறு புறத்தில் ரூபா ஸ்டேர்லிங் பவுணுக்கு எதிராக 16 சத வீதத்தாலும் டியுச் மார்க்கிற்கு எதிராக 21 சத வீதத்தாலும் சி. எ. உ. எதிராக 7 சத வீதத்தாற் வீழ்ச்சியையும் காட்டியது.

## அரச நிதித் தொழிற்பாடுகள்

வரவு செலவுத்திட்டத்தின் மூலமதிப்பீட்டு மிகையான ரூ. 8,950 இலட்சத்துக்கு மிகவும் முரணான வகையில், 1979ஆம் ஆண்டில் அரசின் அரசிறை, செலவினம் மீதான தற்காலிகத் தரவுகள் ரூ. 2,000 இலட்சம் கொண்ட நடைமுறைக் கணக்கு மிகையினைக் காட்டுகின்றன. நடைமுறைக்கணக்கில் ஏற்பட்ட இப்பாதிப்பு பெருமளவிற்கு நடைமுறைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும், முற்பணக்கணக்குகளின் கீழான கொடுப்பனவுகளை மிகக் குறைவாக மதிப்பீடு செய்ததினாலும் ஏற்பட்டதாகும். கடன்கழிரைப்பு நிதியத்துக்கான உதவுதொகைகளையும் மீளக் கொடுப்பனவுகளைவும் உள்ளடக்கிய தற்காலிக மூலதனச் செலவுகள் ரூ. 89,910 இலட்சமாக அமைந்தன. நடைமுறைக்கணக்குமிகையான ரூ. 2,000 இலட்சத்துடன் பொதுவான வரவு செலவுத்திட்டக்குறை ரூ. 87, 910 இலட்சம் ஆகியது. இது பெருமளவுக்கு ரூ. 45,890 இலட்சம்கொண்ட உள்நாட்டு மூலங்களினாலும் ரூ. 42, 290 இலட்சங்கொண்ட வெளிநாட்டு மூலங்களினாலும் நிதியிடப்பட்டது. அரச நிதித் தொழிற்பாடுகளினால் ஏற்பட்ட இறுதியான விரிவுத் தாக்கம் ரூ. 6,340 இலட்சமாகும்.

முந்திய ஆண்டின் மொத்தச் செலவான ரூ 188, 530 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1979 ஆம் ஆண்டில் அரசின் மொத்தச் செலவு ரூ. 215, 210இலட்சத்சமாக அமைந்து 14 சத வீத அதிகரிப்பைக் காட்டுவது. முற்பணக்கணக்குகளின் கீழான செலவுகளையும் உள்ளடக்கிய நடைமுறைச் செலவு, ரூ. 125, 300இலட்சமாக அமைய மூலதனச் செலவு, மீதியான ரூ. 89,910 இலட்சத்தைக்கொண்டிருந்தது. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச்செலவு 2சதவீதத்தினால் உயர்வடைந்து, மூலதனச் செலவு 36 சத வீதத்தினால் மிகவும் கூடுதலாக உயர்வடைந்தது. எனினும் மொத்த உற்பத்தியில் அரசின் மொத்தச் செலவு விகிதம் 49 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது தேசிய உற்பத்தியில் நடைமுறைச் செலவின் பங்கு 32 சதவீதத்திலிருந்து 25 சத வீதமாக வீழ்ச்சியடைய மூலதனச் செலவின்விகிதம்17 சதவீதத்திலிருநீது 18சதவீதமாக உயர்வடைந்தது. அரசிறை 1978 இன் ரூ. 116, 880 இலட்சத்திலிருந்து 9 சத

வீதத்தினுல் உயர்வடைந்து 1979இல் ரூ. 127, 300 இலட்சமாக அமைந்தது. எனினும் மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதமாக நோக்கு மிடத்து அரசிறை 30 சத வீதத்திலிருந்து 25 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைத்தது.

1979ம் ஆண்டின் இறைத்தொழிற்பாடுகளின் சுருக்கம் 1980 ஆம் ஆண்டின் ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் அட்டவணை 1. 23இல் தரப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டுக்காக அரசிறைத்தொழிற்பாடுகளினுல் ஏற்பட்ட தேசிய பணக்குறை கடந்த பத்து ஆண்டுக்களுக்கான ஒப்பீட்டுத்தரவுகளுடன் புள்ளிவிபரப்பின்னிணைப்பு அட்டவணை 22இல் தரப்பட்டுள்ளது.

அரசிறை

தற்காலிகத் தரவுகளின் படி1979ம் ஆண்டின் அரசிறை ரூ. 127,300 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் அரசிறையான ரூ. 116, 880 இலட்சத்தினை விட 9 சத வீத அதிகரிப்பைப்பதிவு செய்தது. 1979இன் அரசிறையின் 77 சத வீதமான பங்கு, உற்பத்தி செலவினம் மீதான மறைமுக வரிகளில் இருந்து பெறப்பட்டது. இது சென்ற ஆண்டின் 79 சதவீதத்தினைவிடச் சிறிதளவு குறைவானதாகும்.

ஏற்றுமதித் தீர்வைகள் மட்டும் ரூ. 41680 இலட்சமாக இருந்து மொத்த மறைமுகவரி வருவாயில் 42 சதவீதமாக அமைந்தது. முற்றுக நோக்குமிடத்து ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்புக்கள் முந்திய ஆண்டினை விட மிகச் சிறிதளவாக 2 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. இது பெரிதும் தேயிலை, தெங்குப் பொருட்களில் இருந்து பெற்ற சேகரிப்புக்கள்குறைவடைந்ததினுல் ஏற்பட்டதாகும். தேயிலையில் ஏற்பட்ட ரூ. 2860 இலட்சம் கொண்ட வீழ்ச்சி பெருமளவுக்கு ஏற்றுமதித்தீர்வை குறைக்கப்பட்டமையினுலும், ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட சிறிதளவான வீழ்ச்சியினுலும் விளைந்ததாகும். தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளைப் பொறுத்தவரை வரிச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட குறைவு பெரிதும் ஏற்றுமதிப் பொருட்களின் உள்ளடக்கத்தில் ஏற்பட்டமாற்றம் அதாவது தேங்காய்த்துருவலில் இருந்து தேங்காய் எண்ணெய்க்கு மாறியதால் விளைந்ததாகும். இறப்பர் மீதான தீர்வை வரவுகள் குறிப்பிடத்தக்க அளவிலான 24 சதவீத அதிகரிப்பைக்காட்டின. ஏற்றுமதி அளவில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் பெரிதும் உயர்வான விலைகள் காரணமாக இது ஏற்பட்டது. சிறு ஏற்றுமதிப் பொருட்கள் மீதான ஏற்றுமதித்தீர்வை வரவுகள் வரிவீதங்களில் ஏற்பட்ட குறைப்புக் காரணமாக 9சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

அரசிறையின் அடுத்த பெரும் விடயமாக இறக்குமதித்தீர்வைகள் அமைந்தன. உற்பத்தி செலவினங்களில் இருந்து பெறப்பட்ட மொத்த வரி வரவுகளில் இது 23 சதவீதமாக அமைந்தது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில், இறக்குமதித்தீர்வை வரவுகள் 55 சதவீதத்தினுல் உயர்வடைந்து ரூ. 22,710 இலட்சம் கொண்ட தேறிய மொத்த சேர்ப்பனவைக் கொண்டிருந்தன. இது பெருமளவுக்கு இறக்குமதிகளின் அதிகரிப்பினுல் ஏற்பட்டதாகும்.

விலை வீக்கத்தின் மத்தியிலும் உயர்ந்தளவான பொருளாதார செயல்பாடுகள் ஏற்பட்டுள்ள ஒரு கட்டத்தில் பொது விற்பனைகள் மொத்த விற்பனவு வரிகள் மூலம் பெறப்பட்டஅரசிறை வருவாய் முந்திய ஆண்டின் நிலுவையான ரூ 1280 இலசத்தையும் நடைமுறையாண்டின் நிலுவையான ரூ. 140 இலடசத்தையும்

## அட்டவணை 1.23

## அரசின் இறைத்தொழிற்பாடுகள் 1976—1980

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1976 | 1977 | 1978 | 1979 (ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள்) | 1979 தற்காலிகமான | 1980 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. வருவாய்(அ) ... | 5,739 | 6,686 | 11,688 | 11,429 | 12,730 | 12,262 |
| 2. மீண்டெழும் செலவினம் ... | 5,554 | 6,148 | 10,408 | 10,734 | 11.502 | 11,119 |
| 3. முற்பண கணக்குகளின் தொழிற்பாடுகள் (குஸற— /மிகை+) ... | – 312 | -430 | -1,831 | + 200 | -1,028 | -100 |
| 4. நடைமுறைக் கணக்கு (மிகை + / குறை —) ... | —128 | +108 | -551 | + 895 | +200 | +1,043 |
| 5. மூலதனச் செலவு — | 3,448 | 3,182 | 6,614 | 7,195 | 8,991 | 9,963 |
| அவற்றில் கடன்கரைப்பு நிதியம் கடன்தீர் கொடுப்பனவுகள் பன்னாட்டு நிதியம் சார்ந்த நிறுவனங்கட்கான கொடுப்பனவுகள் உதவு தொகைகள் ... | (662) | (947) | (1,165)(ஆ) | (1,328) | (1,182)ஆ | (1,346) |
| 6. வரவு செலவுத் திட்டக்குறை ... | 3,576 | 3,074 | 7,165 | 6.300 | 8,791 | 8,920 |
| 7. குறை நிதியிடல் | | | | | | |
| 7.1 உள்நாட்டு மூலங்கள் ... | 2,284 | 1,786 | 2,653 | 1,950 | 4,589 | 3,100 |
| (அ) வயகியல்லா சந்தைக் கடன்கள் | 1,160 | 1,504 | 2,033 | 1,950 | 2,806 | 3,100 |
| (ஆ) சந்தையல்லா கடன்கள் ... | 485 | 505 | 453 | — | 1,103 | — |
| (இ) வங்கித் தொழில்முறை(இ) ... | 639 | –224 | 167 (ஈ) | — | 680(ஈ) | — |
| 7.2 வெளிநாட்டு நிதி ... | 1,326 | 1779 | 4,454 | 4,350 | 4,229 | 5,820 |
| (அ) பண்டக் கடன்கள் ... | 633 | 885 | 1,371 | 2,200 | 1,434 | 2,420 |
| (ஆ) செயற்திட்டக் கடன்கள் ... | 327 | 394 | 1,645 } | | 813 | } 3,100 |
| (இ) நன்கொடைகள் ... | 367 | 500 | 661 } | 2,150 | 1,383 | |
| (ஈ) ஏனைய கடன்கள்(உ) ... | — | — | 778 | — | 599 | 300 |
| 73. பண நிலுவைகளின் பயன்பாடு ... | - 33 | –492 | 58 | — | -28 | — |
| 8. அரச இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | 605 | –715 | 173 | — | 634 | — |

மூலங்கள்: இலங்கை மததிய வங்கி.
திறைசேரி.

(அ) ெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட வருவாயில் மூலதன நன்கொடைகள் தவிர்ந்த

(ஆ) 1978இன் ரூ. 1740 இலட்சம், 1979இன் ரூ. 1780 இலட்சம்கொண்ட வெளிநாட்டு நிர்வாக எடுப்பனவுகளின் மீளளிப்புக்களையும் உள்ளடக்கும்.


(இ) பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளை நிறைவேற்ற மத்திய வங்கி கொடுத்த சிறப்பு முற்பணங்களையும் உள்ளடக்கும்.

(ஈ) வங்கித்துறையுடனான ரூபாக்கடன்களின் மீளளிப்புக்களுக்காக சீராக்கஞ் செய்யப்படவில்லை. 1978இல் ரூ. 520 இலட்சங்கள் 1979இல் ரூ. 180 இலட்சங்கள்.

(உ) ப. நா. நி. பொறுப்பாண்மை நிதியம்.

## அரசிறையும் செலவும்

*நிதியாண்டின்படி எண்தொகைகள்**




பொருளாதாரப் ஆராய்ச்சித் திணைக்களம் மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1970/71ஐ உள்ளடக்கியதும், அதுவரையுமான நிதியாண்டுகள் 12 மாதங்களைக் கொண்டு செத்தம்பர் 30 இல்முடிவடைந்தன, 1971/72ஆம் நிதியாண்டுக்குரிய தரவுகள் 1971 ஒற்ரேபர் 1 தொடக்கம் 1972 திசெம்பர் 31 வரையான 15 மாதங்களைக் கொண்ட காலப் பகுதிக்கும் 1973ஆம் ஆண்டுக்குரிய தரவுகள் 1973 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கும் உரிவையாகும்.

செலவு பற்றிய தரவுகள், வாக்களிக்கப்பட்ட மொத்த செலவுகளையும் (கடன்கரைப்பு நிதியங்களுக்குச் செலுத்தப்பட்ட உதவு தொகைகளையும், வருமானத்திலிருந்து நேரடியாகச் செலுத்திய பொதுப்படுகடன் கொடுப்பனவுகளையும் பன்னாட்டு நிதி அமைப்புக்குச் செய்த சிறப்புக் கொடுப்பனவுகளையும் விலக்கி தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியத்திலிருந்து நிதியீட்டஞ் செய்யப்பட்ட செலவுகளையும் முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகளிலுள்ள தேறிய கொடுப்பனவுகளையும் குறிப்பனவாகும் IIஇல் உள்ள அட்டவணை 9ஐயும் பார்க்கவும்.

1979இன் எண்தொகைகள் தற்காலிகமானவை,

கழித்த பின்னரும் 26 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியது. தேர்ந்த விற்பனை வரியில் இருந்து பெற்ற வரவுகள் மிகச் சிறிதளவான 1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து மொத்தச் சேகரிப்பினை ரூ. 19,070 இலட்சமாக்கியது. மதுபானம் மீதான கலால் வரிகள் அதிகரித்த போதிலும் அதிலிருந்து கிடைத்த அரசிறை சென்ற ஆண்டின் ரூ. 5,550 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,980 இலட்ச மாக அமைந்து 10 சதவீத வீழ்ச்சியைக்காட்டின. சென்ற ஆண்டின் சேகரிப்புக் கள் சில நிலுவைகளை உள்ளடக்கியிருந்தமையால் இவ்வீழ்ச்சி ஒப்பிட முடியாத தாகும். தேயிலை வரிகளும் (பெறுமான விகிதவரி) 56 சதத்திற்கு மேற்பட்ட தொரு அதிகரித்த வீழ்ச்சியைக் காட்டியது. புகையிலைமீதான வரிச்சேகரிப்பு க்களின் மொத்தம் ரூ. 8010 இலட்சமாக அமைந்து 6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியவேளையில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்கள் மீதான நிருவாக வரியிலிருந்து பெறப்பட்ட சேகரிப்புக்கள் சென்ற ஆண்டின் ரூ. 600 இலட்சம் கொண்ட மிகச் சிறிதளவிலான வரவுகளுடன் ஒப்பிடுகையில் ரூ. 3,850 இலட்சமாக அமைந்து ஐந்துமடங்கு மேலான அதிகரிப்பைப் பிரதிபலித்தன. இக்கணிசமான அதிகரிப்பு ஓகத்திலிருந்து எல்லாத் தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்களையும் உள்ள டக்கும் வகையில் நிருவாகவரி விரிவாக்கப்பட்டமையாலும். அதிகரித்த ஏற்று மதி விலைகளாலும் ஏற்பட்டதாகும்.

கூட்டு, கூட்டல்லா வருமானங்களிலிருந்து பெற்றவரவுகள் ரூ. 12,890 இலட்சமாக அமைந்து 17 சதவீத அதிகரிப்பைக் காட்டின. உரிமச்சான்றி தழ்கள் சொத்துகைமாற்றல் வரிகள், வட்டி, பங்கிலாபங்களும் இலாபமும் வர்த்தக முயற்சியிலிருந்து பெற்ற மொத்த வரவுகள் விற்பனவுகளும் கட்டணங் ளும், மூலதன வரவுகள்போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய வரவுகள் ரூ. 17,940 இலட்சமாக அமைந்து 18சத வீதம் கொண்ட அதிகரிப்பைக்காட்டின. இதுபன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து பெற்ற தங்க விற்பனைகளிலிருந்து கிடைத்த பெறுகைகளான ரூ. 1,380 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது

உற்பத்தி, செலவினம் மீதான மறைமுக வரிகள் மொத்த அரசிறையில் ஏறக்குறைய நாலில் மூன்று பங்காக அமைந்தன. இவற்றில் 72சதவீதம் இலங் கையின் வெளி நாட்டு வர்த்தகத்திலிருந்து பெறப்பட்டது. வர்த்தகம் தொடர் பான இவ்வரி வருவாய் மொத்த அரசிறையில் 55 சத வீதமாக அமைந்து வரவு செலவுத் திட்டம் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது பெருமளவுக்குத் தங்கியிருப்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு உள்நாட்டு நிதித் தொழிற்பாடு கள் பன்னாட்டுச் சந்தைகளில் ஏற்படும் சார்பற்ற விலைத் தளம்பல்களினால் பெரு மளவுக்குப் பாதிக்கப்படக்கூடுவதுடன் இது 1979ஆம் ஆண்டின் பிந்திய அரைப் பகுதியில் தேயிலைக் கைத்தொழிலுக்குச் சலுகை வழங்கும் பொருட்டு தேயிலை யின் ஏற்றுமதித் தீர்வை குறைக்கப்படவேண்டி இருந்தபோது ஏற்பட்டதைப் போல வரவு செலவுத் திட்டத்தின் மீது மிகப் பெருந் தடைகளை ஏற்படுத்த வும் கூடும். மேலும் மொத்த அரசிறையில் மறைமுக வரிகளின் விகித அள வின் முதன்மைத் தன்மை கூடிச் செல்வது. வரிப் பளு பற்றிய விடயத்திலும் அதன் விளைவுகளைக் கொண்டுள்ளது வரிநிலைகளைப்பற்றி ஆராயும்போது பொதுச் செலவினத்தினால் ஏற்படும் நன்மைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமாயின், எந்த ஒரு அமைப்பிலாவது எல்லா மறைமுக வரிகளும் பின் லடையும் போக்குடைய பண்பை, குறிப்பாக ஒருமைப்பாடற்ற வருமானப் பங்கீடு உள்ளவிடத்து, கொண்டுள்ளது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

DISCARDED

எனவே, வெவ்வேறான வருவாய் வகுப்புக்களின் மீதான வரி நிலைகளின் அடிப்படையில் மறைமுக வரி வீதங்கள் தீர்மானிக்கப்படுமிடத்து பின்னடையும் போக்கு பெரிதளவு தடுக்கப்படலாம்.

கூட்டு கூட்டல்லா வருமானங்கள், மீதான வரிகள், மொத்த வரவுகளில் 10 சத வீதமாக மட்டும் அமைய அரசிறை 1978ஆம் ஆண்டினைவிட 17 சத வீதம் கூடுதலாக, அதற்கு முந்திய ஆண்டில் காணப்பட்ட அளவினதாக விளங்கியது. 1979 இன் நடைமுறை விலைகளில் மொ. தே, உ. அதிகரிப்பு 22 சத வீதமாக இருப்பதையும் வேறோர் இடத்தில் கூறப்பட்டதுபோல வருவாய் பங்கீடு மிகவும் குறைபாடு உடையதாக உள்ளதையும் நோக்குகையில் மறைமுக வரிகளின் அதிகரிப்பு மிகவும் திருப்தியற்ற ஒன்றென்றே கொள்ள வேண்டும். மிகவும் தாராளமான வரி விடுதலைக்கும் முதலீட்டுச் சலுகைகளும் இந்நிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்ததுடன் வருமானப் பங்கீட்டில் இது பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது வெளிப்படை.

மீண்டெழும் செலவு

முற்பணக் கணக்குகள் மீதான தேறிய வெளிக் கொடுப்பனவுகள் உட்பட மொத்த மீண்டெழும் செலவு ரூ.125,300 இலட்சமாக அமைந்து 2 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. முற்பணக் கணக்குக் கொடுப்பனவுகள் நீங்கலாக, மீண்டெழும் செலவு 11 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

முற்பணக் கணக்குகளின் கீழ் ஏற்பட்டவை நீங்கலான மீண்டெழும் செலவு ரூ 115,020 இலட்சமாக அமைந்தது. இதில் சம்பளமும் கூலிகளும் 30 சத வீதமாக அமைந்து ரூ. 32,750 இலட்சமாக விளங்கியது. பொதுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 16,340 இலட்சமாக அமைந்து 22 சத வீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. செத்தெம்பரிலிருந்து உணவு முத்திரைத் திட்டம் தொடங்கியதையடுத்து ரூ. 23,330 இலட்சமாக மூல மதிப்பீடு செய்யப்பட்ட உணவு உதவுதொகை ரூ. 17,050 இலட்சமாகக் குறைக்கப்பட்டது. எனினும் மீதியான காலத்திற்குரிய இத்திட்டத்தின் செலவு ரூ. 5,100 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. இவ்வாறாக 1979 இல் உணவு உதவு தொகையில் ஏற்பட்ட சேமிப்பு ரூ. 1,180 இலட்சம் வரையில் அமைகிறது. தற்காலிகத் தரவுகளின்படி வளமாக்கி, மீன்பிடி, தேசிய பாற்சபை. தேயிலைக் கொழுந்து போன்ற உற்பத்தி மேம்பாட்டுக்கான உதவுதொகை ரூ. 7,280 இலட்சமாக அமைந்தது. தேசிய சேமிப்பு வங்கிக்கான உதவு தொகை ரூ 1,130 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முற்பணக் கணக்கு நடவடிக்கை தொடர்பான நிலை முந்திய ஆண்டினை விடச் சிறந்ததாகக் காணப்பட்ட போதிலும், மீண்டெழும் செலவில் 8 சத வீதமான அளவு. சாதாரண வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதை விட வெளியிலிருந்து நிதியீட்டப்பட வேண்டியிருந்தது. பொருட்கள் பணிகளின் அதிகரித்த செலவும் அதிக அளவு நடவடிக்கைகளுடன் உயர்ந்த அளவான கையிருப்புக்களைப் பேணவேண்டி இருந்ததையும் இத்தகைய நடவடிக்கைகளில் மேலதிகச் செலவு ஏற்படக் காரணமாக அமையலாம். ரூ 8,030 இலட்சம் கொண்ட முக்கிய அதிகரிப்பு, அரச திணைக்களங்களில் ஏற்பட்டது. இதில் உணவு ஆணையாளரது கொள்வனவுப் பங்கீட்டுக் கணக்கிலும் புகைவண்டித் திணைக்களத்திலும் முறையே ஏற்பட்ட ரூ. 3,710 இலட்சமும்,

ரூ. 1470 இலட்சமும் அடங்கும். முற்பணக் கணக்குகளிலும் மிகை நிலுவைகளிலும் இருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 3060 இலட்சமாகும்.

முற்பணக் கணக்குகள் 1978 இல் அதற்கு முந்திய ஆண்டின் ரூ 4300 இலட்சத்திலிருந்து ரூ. 18,310 இலட்சமாக அதிகரித்ததைத் தொடர்ந்து அரச செலவினத்தை நிதியிடும் முக்கிய அம்சமாகத் தோன்றுவதைக் காணலாம். உலகின் வேறு எப்பகுதியிலும் இருப்பதாகப் பதிவு செய்யப் படாத முற்பணக் கணக்குகள் இலங்கையில் முப்பதாம் ஆண்டுகளில் அரசின் சிறு உற்பத்தி. வர்த்தக நடவடிக்கைகளை நிதியிடும் பொருட்டு ஒரு சுழல் நிதியை உருவாக்குவதற்காக தொடங்கப்பட்டது இக்காலம் தொட்டு முற்பணக் கணக்கு நிதியீட்டல் முறை அரச நிதிமீது நாடாளுமன்றம் மேற்கொண்ட கட்டுப் பாட்டை மீறுவதற்கு ஏதுவாகின்றது என்ற பெரும் கண்டனத்துக்கு வழி வகுக்கின்றது. கோட்பாட்டு அடிப்படையில் சாதாரணமாக முன்கூட்டியே எதிர்பார்க்கக் கூடிய எந்த ஒரு அரச நடவடிக்கையும் வரவு செலவுத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படலாம். அரச நடவடிக்கைகளுக்குச் சில நிதி வசதிகள் வழங்கப்பட வேண்டின், அரச கூட்டுத்தாபன முறை மேற்கொள்ளப்படலாம். எனவே இக்கணக்குகள் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்துவிட்டதாகக் கணிக்கப்படும் இவ்வேளையில் எதிர்காலத்திலும் இக்கணக்குகள் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பதுபற்றி மதிப்பிடுவது சரியானதாகும்


1979 இல் மீண்டெடும் வாக்குகளின் குறைச் செலவு 4 சத வீதமானதாக இருந்தது. சென்ற ஆண்டின் 7 சத வீதக் குறைச் செலவுடன் இது ஒப்பிடத்தக்கது. இத்திருந்திய நிலை பெரும்பாலும் விலைவாசிகளின் உயர்வினல் ஏற்பட்டிருக்கலாம்.

மூலதனச் செலவு

1979 இன் மூலதனச் செலவான ரூ. 89,910 இலட்சம் சென்ற ஆண்டினை விட 36 சத வீதமான அதிகரிப்பைக் காட்டியது. படுகடன்களின் மீளக் கொடுப்பனவான ரூ. 11820 இலட்சம் கொண்ட ஒதுக்கினை நீக்கின் மூலதனச் செலவு ரூ. 78,090 இலட்சமாக அமைந்து 43 சத வீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. இவ்வாண்டுக் காலத்தின் போது செலவு அதிகரித்துச் சென்றமையும் மேலதிக நடவடிக்கைகளும், துணை ஒதுக்கீடுகளை ரூ. 23,340 இலட்சம் அளவுக்கு ஏற்படுத்தியதுடன் வரவு செலவுத் திட்டத்தின் மூல மதிப்பீடுகளை இது 32 சத வீதத்தினல் உயர்த்தியது. 1978 இன் குறைப் பயன்பாட்டின் சீராக்கப்பட்ட மட்டமான 22 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ் ஆண்டின் தற்காலிகத் தரவுகளின்படியான குறைப் பயன்பாடு 19 சத வீதமாகும்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு (ரூ. 14'970 இலட்சம்) வீடமைப்பு உள்ளூராட்சி கட்டடவாக்க அமைச்சு (ரூ. 12,240 இலட்சம்) என்பன மூலதனச் செலவில் ஏறக்குறைய 35 சத வீதத்துக்குப் பொறுப்பாக அமைந்தன. கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சு ரூ. 6,900 இலட்சத்துக்கு வகை கூறியது. இதில் கணிசமான தொகை யூரியாத் தொழிற்சாலைக்காகும். போக்குவரத்து அமைச்சின் செலவு ரூ. 8150 இலட்சமாக அமைந்தது இதில் 69 சத வீதமான பங்கு புகைவண்டித் திணைக்களத்தின் புகைவண்டிப் பாகங்கள் போன்றவற்றிற்காகும். மீதியான பங்கு பேருந்துகளுக்கான அடிச்சட்டங்களைக் கொள்வனவு செய்வதற்கும்' நிர்மாண பொருட்களுக்குமாக இலங்கை மத்திய போக்கு வரத்துச் சபைக்குச் சென்றது. ஏனைய முக்கிய அமைச்சுக்களின்


## உள்நாட்டுப்படுகடனின் உள்ளடக்கம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* கடன்கலைப்பு நிதியம் தவிர்ந்த மொத்தப் பொதுப்படுகடன்
1979 ண் எண் தொகைகள் தற்காலிகமானவை.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1978இல் இருந்தான செயற்றிட்டமல்லா (பண்டச்) கடன்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் பொறுப்பாண்மை நிதியத்தையும் உள்ளடக்கும்.

1979ஆம் ஆண்டின் எண்தொகைகள் தற்காலிகமானவை.

மூலதனச் செலவு மின்வலு பெருந்தெருக்கள் அமைச்சு (ரூ. 4710 இலட்சம்) நிதித் திட்டமிடல் அமைச்சு (ரூ. 5900 இலட்சம்), திட்ட செயலாக்கல் அமைச்சு (ரூ. 4930 இலட்சம்), அஞ்சல் தொலை தொடர்புகள் அமைச்சு (ரூ. 2360 இலட்சம்), மீன்பிடி அமைச்சு (ரூ. 1160 இலட்சம்) என்பனவாகும். துறை அடிப்படையில் நோக்குகையில் மொத்த முதலீட்டு மூலங்களில் வேளாண்மைத் துறை ஏறக்குறைய 26 சத வீதத்தைப் பெற்றது.

நிதியில் பெருமளவான தொகை நீண்டகாலத்தின் பின்பே பயன்தரக்கூடியதான பெரிய அளவிலான உள்ளமைப்பு சார்ந்த முதலீடுகளுக்கு ஒதுக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது. இவை குறுங்காலத்தில் மக்களுக்கு அவர்களால் நுகரப்படும் பொருட்களின் உற்பத்தியில் எவ்வித வளர்ச்சியுமில்லாமலே பண வருவாயைக் கூட்டலாம். இன்றியமையாத வாழ்க்கைப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படாவிடின், அது உள்நாட்டு விலைகளை உயர்த்தும். இது தற்போது கிடைக்கத்தக்கதாக உள்ள வெளிநாட்டுச் செலாவணி மூலங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே துறை அடிப்படையில் சமமின்மையைத் தடுக்கும் திறனுடனேயே இத்தகைய மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனால் ஒரு துறை மற்றத் துறையிடமிருந்து மூல வளங்களைத் தடுக்கும் நிலைமை ஏற்படாது. உள்ளமைப்புச் சார்ந்த முதலீட்டுச் செலவு, முதற்கண் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பிறழ்வடைவதனின்றும் தவிர்த்து அவற்றின் செயற்றிறனை அதிகரிக்கக்கூடிய துறைகளிலேயே மேற்கொள்ளப்படல்வேண்டும். நுண் செயற் திட்டங்களுக்கும் பெரும்பாக பொருளாதார அடைவுகளுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு தேவைப்படுவதன் இன்றியமையாமையை இப்பொதுச் செலவினத்தின் தோற்றப்பாட்டுத் தன்மைகள் எடுத்துக் காட்டுகின்றன.

வரவு செலவுத் திட்டக் குறைக்கு நிதியிடல்

1979 இன் வரவு செலவுத் திட்டக் குறை அதற்கு முந்திய ஆண்டின் ரூ. 71,650 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 87,910 இலட்சமாக அமைந்தது. இக்குறையை நிதியிடுவதற்கு அரசு உள்நாட்டுத் துறையிலிருந்து ரூ 45,890 இலட்சத்தையும், வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்களாகவும் நன்கொடைகளாகவும் ரூ. 42,290 இலட்சத்தையும் பெற்றது.

உள்நாட்டுக் கடன்கள் சந்தை மூலங்களிலிருந்து பெற்ற ரூ 34,860 இலட்சத்தையும் சந்தையல்லா மூலங்களிலிருந்து பெற்ற ரூ 11,030 இலட்சத்தையும் உள்ளடக்கும். சந்தைக் கடன்பாடுகளில் ரூ. 29,500 இலட்சம் ரூபாக் கடன்களிலும், ரூ. 3570 இலட்சம் திறைசேரி உண்டியல்களிலும், ரூ. 1810 இலட்சம் மத்திய வங்கி முற்பணங்களிலுமிருந்தும் பெறப்பட்டது. ரூபாக் கடன்களுக்கான உதவு தொகைகள் வங்கியல்லாத் துறையிலிருந்து மட்டுமே கிடைத்தன. எனினும் வங்கித் துறையினால் பெறப்பட்ட ரூ. 180 இலட்சம் கொண்ட ரூபாக் கடனை அரசு மீளச் செலுத்தியது. திறைசேரி உண்டியல்களைப் பொறுத்தவரை வங்கிகள் பெற்ற திறைசேரி உண்டியல்கள் ரூ. 4950 இலட்சத்தினால் அதிகரிக்க வங்கியில்லாத்துறை ரூ. 1380 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்து ரூ.3570 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. இவ்வாண்டின் தேறிய மத்திய வங்கி முற்பணங்கள் ரூ. 1,810 இலட்சமாகும். இவ்வாறாக வங்கித்துறையிடமிருந்து பெற்ற கடன்பாடுகளும் ரூ. 6800 இலட்சமாக அமைந்தன.

வரவு செலவுத் திட்டக் குறைக்கு நிதியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு மூலங்கள் ரூ. 42,290 இலட்சமாக அமைந்தன. இவை ரூ. 8130 இலட்சம்கொண்ட செயற்திட்டக் கடன்களையும், ரூ. 14,340 இலட்சம்கொண்ட செயற்றிட்டமல்லாக் கடன்களையும் ரூ.13,830 இலட்சம் கொண்ட கொடைகளையும் ரூ. 5990 இலட்சம் கொண்ட ப.நா.நி.யின் பொறுப்பாண்மை நிதியக் கடனையும் உள்ளடக்கும்

**பொதுப்படு கடன்**


1979ஆம் ஆண்டு இறுதியில் வெளிநிற்கும் அரசின் மொத்தப் பொதுப்படு கடன் ரூ. 3,54,750 இலட்சமாக அமைந்து, சென்ற ஆண்டின் 24 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. உள்நாட்டுக் கடன் ரூ. 1,96,340 இலட்சமாகவிருக்கையில் வெளிநாட்டுக் கடன் ரூ 158,410 இலட்சத்தைக் கொண்டுள்ளது,

நீண்ட தவணை, குறுந்தவணை ஆகிய இருகடன்களையும் உள்ளடக்கியமொத்த உள்நாட்டுக் கடன் ரூ. 32,670 இலட்சம்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. இவ்வாண்டின்போது நடுத்தர நீண்ட தவணைக்கடன்கள் சென்ற ஆண்டின் ரூ 15,130 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 27, 270 இலட்சத்தால் அதிகரித்துள்ளன.

இவ்வாண்டில் அரசின் திறைசேரி உண்டியல்களின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அளவு எதுவித மாற்றமுமின்றி இருந்தது. 1979 டிசெம்பர் இறுதியில் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை ரூ. 30,000 இலட்சமாக விளங்கி சென்ற ஆண்டிலும் பார்க்க ரூ. 3, 650 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. வங்கித் துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1978இல் ரூ 22,000 இலட்சமாக இருந்து 1979இல் ரூ. 27,060 இலட்சமாகக் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவு செய்திருக்க, வர்த்தக வங்கி உடைமைகள் ரூ. 1,120 இலட்சத்திலிருந்து ரூ. 500 இலட்சமாக வீழ்ச்சியுற்றன. மத்திய வங்கியினால் வழங்கப்படும் அரசின் தற்காலிக முற்பணங்கள் ரூ. 1,810 இலட்சத்தால் அதிகரித்து, ஆண்டிறுதியில் வெளிநிற்கும் மொத்தப் பொறுப்பு ரூ. 1, 370 இலட்சமாக விளங்கியது. மொத்தமாக குறுந்தவணை ரூபாக் கடன் ரூ. 41, 650 இலட்சம் கொண்ட வெளிநிற்கும் பொறுப்புடன் ரூ 5450 இலட்சத்தால் அதிகரித்துள்ளது.

பதினைந்கு ரூபாக் கடன்களின் விளைவாக ரூ. 29, 500 இலட்சம் கொண்ட தொகை திரட்டப்பட்டன. 10 – 12 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தையுடைய இக் கடன்கள் ஆண்டொன்றிற்கு 10 சதவீத வட்டி வீதத்தைக் கொண்டனவாக விளங்கின. தேசிய சேமிப்பு வங்கியும் கடன் கரைப்பு நிதியமும் ஊழியர் சேம நிதியமும் தொடர்ந்து ரூபாக் கடன்களின் முதன்மை வழங்குநர்களாக விளங்கின. தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள அதிகரித்த நிலையான வைப்புக்களினால், இவ்வங்கி இதன் வழங்கு தொகையின் தொடர்பான பங்கை 1978 இல் 22 சதவீதத்திலிருந்து 1979 இல் 38 சதவீதமாக அதிகரித்தது. இவ் ஆண்டில் ஊழியர் சேம நிதியம் தனது வழங்குத்தொகை 45 சதவீதத்தால் அதிகரித்த போதும், இதன் தொடர்பான பங்கு 33 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாகக் குறைவுற்றது. நிருவாகக் கடன்களைப் பொறுத்தவரை, ரூ. 1,640 இலட்சம் கொண்ட தேறிய தொகை மீளக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால், வெளிநிற்கும் பொறுப்பு ரூ. 5, 400 இலட்சமாக குறைவுற்றது. இவ்

# பொதுப்படுகடனின் உள்ளடக்கம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப்படுகடன்
1978 ஆண்டு எண்தொகைகள் தற்காலிகமானவை.

வாறு நீண்ட நடுத்தர உள்நாட்டுக் கடனின் வெளிநிற்கும் மொத்தப் பொறுப்பு 1979இல் ரூ: 1, 55,700 இலட்சமாக உயர்வடைந்தது

1979ஆம் ஆண்டு இறுதியில் வெளிநிற்கும் மொத்த வெளிநாட்டுக் கடன் சென்ற ஆண்டின் ரூ. 39,880 இலட்ச அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் ரூ. ரூ. 12,580 இலட்ச அல்லது 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. வெளிநிற்கும் மொத்த வெளிநாட்டுக் கடன், செயற்றிட்டக் கடன்களையும் (ரூ. 55,700 இலட்சம்) பண்டக்கடன்களையும் (ரூ.89,010 இலட்சம்) ப.நா.நி. பொறுப்பாண்மை நிதியக்கடன்களையும்(ரூ. 13700 இலட்சம்) உள்ளடக்கியது. வெளிநாட்டுக் கடன்களின் வெளிநிற்கும் பொறுப்பு ரூ.8,040 இலட்சம் கொண்ட தொகையை வரவுவைத்திருப்போர் மீளக் கொடுப்பனவு செய்தமையால் பெரிதும் குறைக்கப்பட்டது. ஐக்கிய இராச்சிய அரசு ரூ. 7,920 இலட்சம் கொண்ட கடன் தொகையைத் திருப்பிப் பெறுவதில்லையெனத் தீர்மானித்தது. இலங்கைக்குச் சார்பாக ஏற்பட்ட செலாவணி வீத வேறுபாடுகளும் பொறுப்பை ஏறக்குறைய ரூ. 3160 இலட்சத்தால் குறைத்தன. 1979இல் வெளிநாட்டுக் கடன்களின் மொத்த வருவாய்கள் ரூ. 28, 780 இலட்சமாக விளங்கின. இவை ரூ. 8570 இலட்சசெயற்றிட்டக் கடன்களைவும் ரூ. 14220 இலட்ச பண்டக்கடன்களையும் ரூ.5,990 இலட்ச ப.நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்களையும் உள்ளடக்குகின்றன. ரூ. 4, 990 இலட்சம் கொண்ட தொகை மீளக்கொடுப்பனவு செய்தபின், மூலவளங்களின் தேறிய மாற்றல் ரூ. 23, 790 இலட்சமாக விளங்கியது.

ஆண்டில் செயற்றிட்டக் கடன்களின் முதன்மை மூலங்கள் பின்வருவனவாகும். நெதர்லாந்து (ரூ. 1. 880 இலட்சம்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (ரூ.1,810 இலட்சம்) ஆசிய அபிவிருத்தி வங்கி (ரூ. 1. 600 இலட்சம்) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (ரூ. 1. 440 இலட்சம்) சேர்மன் இணையாட்சிக் குடியரசு (ரூ. 520 இலட்சம்) இந்தியா (ரூ. 350 இலட்சம்) பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கி (ரூ.330 இலட்சம்) குவெய்த் (ரூ.260 இலட்சம்)பண்டக்கடன்களை அளித்தவர்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகள் (ரூ. 4,730 இலட்சம்) யப்பான் (ரூ. 3980 இலட்சம்) சேர்மன் இணைபாட்சிக் குடியரசு (ரூ 2,500 இலட்சம்) இந்தியா (ரூ. 1,130 இலட்சம்) கனடா (ரூ. 960 இலட்சம்) பிரான்சு (ரூ. 900 இலட்சம்) ஆகும்.

சென்ற ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் மொத்தப் பொதுப்படுகடனில் வெளிநாட்டுக் கடன்களின் பங்கு, கடன் வழங்கியவர்கள் மீளக் கொடுப்பனவு செய்தமையாலும் சார்பான செலாவணி வீத மாற்றங்களினாலும் 47சத வீதத்திலிருந்து 45 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. வரவு செலவுத் திட்டப் பணக்குறையை நிதியிடுவதற்கு சென்ற ஆண்டைப் போலல்லாது குறைந்தளவில் வெளிநாட்டு மூலங்களில் தங்கியிருக்கப்பட்டது. பணக்குறையின் சதவீதமாக, வெளிநாட்டு மூலவளங்கள் சென்ற ஆண்டின் 62 சதவீதப் பங்குடன் ஒப்பிடுகையில் 1979இல் 48 சதவீதமாக விளங்கின.

உள்நாட்டுக் கடனின் 20 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தை 9 சத வீதத்தால் மட்டுமே அதிகரித்த வருமான வீதத்துடன் ஒப்புநோக்குகையில் உள்நாட்டுக் கடன் தீர்ப்பனவு விகிதம் (பொதுப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அரசின் வருமானத்தின் விகிதமாக) 1978 இல் 14 சத வீதத்திலிருந்து 1979 இல் 15 சதவீதமாக அதிகரித்தது.